583

கவீந்திரன் கதை

583



O-,1NBDW
N47
104026

இவர்

ஹொன்னப்ப பாகவதரல்ல!

காற்றிலே மிதந்துவரும் ஒலி யெல்லாம் கவிஞரின் கவிதை போல்—தெற்கு பிராந்தியங் களின் நாடக அரங்கத்தில், ராஜ பார்ட் நடிகராக நடித்து வரும் நடிகர் திரு. **M R. கோவிந்தராஜன்தான்** விரைவில இவரை வெள்ளித் திரையில் சந்திக்கலாம்.

இவர் முகவரி.

M. R. கோவிந்தராஜன்
மேலபுலிவார் ரோட், T. P. O.
திருச்சி.

★

"செல்வி"

காலத்திற்கேற்ற கருத்தமைந்த

கதை - கட்டுரை - கவிதைகள் நிறைந்த

இலக்கிய மாதப் பத்திரிகை.

மாணவர்க்குப் பயன்படும்.

இலக்கணப்—விஞ்ஞானம்பற்றிய சிறந்த கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

வருட சந்தா ரூ. 3 தான் : தனிப் பிரதி 4 அணா.

…ளுக்கு :

…ஜர் 'செல்வி' நாகர்கோவில் (தென் திருவிதாங்கூர்)

கவிஞரின் கதை!

தீட்டியவர் :

T. C. S. மணி

புத்தொலி பதிப்பகம்,
தெப்பக்குளம் :: திருச்சி.

முதல் பதிப்பு பிப்ரவரி 1947

உரிமை உடையது.

விலை ஆறு அணா

Printed at the Adal Padal Press, Madras—M. S. 491—2.47

என் எண்ணம்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனவர்களது பாடல்களை பல்லாண்டுகளுக்கு முன்பே 'புரட்சி', 'குடியரசு', 'காந்தி', 'நகரதூதன்', 'மணிக்கொடி' முதலியபத்திரிகைகளின்மூலம் படித்திருக்கிறேன்! மக்கள் தம் நினைவிலே நிலையாக வைத் திருக்கப்பட வேண்டிய பிரபலஸ்தர்களில் இவரும் ஒருவ ரென்பதை, இவருடை கவிதைகள் அன்றே கூறின! ஆனால் அன்று நாடு புரட்சிக் கவிஞரது பாடலைப் பார்த்து சிரித்தது! பழமை யென்னும் இருட்டிலே பதுங்கிக் கிடந்த வைதீக மென்னும் பூனை புலியென சீறிற்று! புரட்சிக் கவிஞரது பாடலை நாஸ்திக பாடல்களென் றும் பெயரிட்டழைத்தது. பழமையிலே மூழ்கிக் கிடந்த மக்களும், புரட்சிக் கவிஞரின் பாடலை படிக்கக்கூட பயந் தனர். ஆனால் இன்றோ........?

காலம் மாறமாற மக்களின் மன நிலையும் மாறு மன்றோ! ஆம், இந்த மனமாற்றத்தால் தமிழ் மக்க ளடைந்த விழிப்பின் பயனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாச னது புலமைப் புரட்சியை நாவலர் தலைமையில் போற்றிப் புகழ்ந்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழியும் அண்மை யில் அளித்தனர்! நம்முடைய நாட்டவரின் இந்த நற்பணி மகிழ்ச்சிக்குரிய சேதியாகும். காலனின் பாசத்திற்கு பலியாகும் வரை, கப்பலில்வந்த அடிமைத்தனத்தை கப்பலி லேற்றியனுப்ப வேண்டுமென கர்ஜித்த கர்ம வீரன் சிதம்பரம் பிள்ளையையும், அடிமைத்தனத்தில் ஆழ்ந்து துயிலுற்றுக் கிடந்த மக்களை ஆவேசக் கவிதைகளால் தட்டி யெழுப்பி தேசிய உணர்ச்சியை ஊட்டிய பாரதியையும் பாராட்டவில்லையே, இந்த நாட்டு மக்களென நினைத்து மனம் வருந்திக் கொண்டிருந்தபோது, புரட்சி கவிஞரை

மக்கள் பாராட்டினரென்ற சேதி நாட்டிற்கு நல்லகாலம் பிறந்ததின் அறிகுறி யென்பது தவிர, வேறென்ன சொல்வது?

நாட்டவரின் பாராட்டுதலை பெற்ற, பாவலர் பாரதிதாசன் அவர்களது வாழ்க்கை வரலாற்றை, சுருக்கமாக வெளியிட வேண்டுமென்பது என் அவா! இந்த ஆசையின் எதிரொலியே கவிஞரின் கதை! கவிஞரின் கதையென்ற தலைப்புள்ள இந்தச் சுவடி இரண்டாண்டுகளுக்கு முன்னரே தீட்டப் பட்டதால், கடலென தமிழர் கூடி, கவிஞருக்குப் பொற்கிழியும், பொன்னுடையும் தந்த வரலாறு தீட்ட இயலவில்லை!

அருமையான உள்ளக் காட்சிகளை, எளிமையான நடையில் கவிதையாக புனைந்திருக்கும், புரட்சிக் கவிஞரின் பாடலுக்கு விமர்சனம் தேவையேயில்லை யென்பது என் கருத்து! புத்தகத்தைப் பதிப்பிடுமன்பர் விமர்சனம் தேவையென விரும்பியதால், புத்தகத்தின் இரண்டாம் பகுதியாக விமர்சனம் சேர்க்கப்பட்டுள்ளது. கவிஞரின் கவிதை ஒன்றை வைத்துக்கொண்டே பல புத்தகங்களை, பலதலைப்பில் எழுதிவிடலாம்! பரந்த கருத்தை தன்னகத்தேயடக்கியுள்ள புரட்சிக் கவிஞரின் கவிதைகளுக்கு, மிக சுருக்கமாகவே விமர்சனம் தீட்டியுள்ளேன்!

விமர்சனத் துறைக்கு இது தான் என் முதல் முயற்சி! இதை நான் விமர்சனமென்று கூட சொல்லமாட்டேன்—நான் படித்து ரசித்த பகுதியை, உங்களுக்குக்கூறுவதாகவே கொள்ளுங்கள்!

இறுதியாக ஒரு வார்த்தை! கவிஞரின் கவிதை, நூல் வடிவில் வெளிவர என்னைத் தூண்டிவந்த நண்பர் நந்திவாடா மதன் கோபாலிற்கும், பதிப்பகத்தாருக்கும் நன்றி! தமிழ் வாழ்க!

T. C. S. மணியன்.

அவர் யார்?

புரட்சிக் கவி பாரதிதாசன் பாரதீயப் பரம்பரையின் பிரதான புருஷன். தமிழன்னையின் தவப்புதல்வன். 'தன் கடன் தாய்ப்பணி புரிதலே' யென்னும் நற்பணியாளன். தம் கலையையும், நாகரீகத்தையும், நாட்டையுமிழந்து, நாயினுங் கேடாய் நலிந்து கிடக்கும் நம்மவரை நோக்கி, "நமதடா இந்த நாடு—என்றும், நாமிந்நாட்டின் வேந்தர், சமமடா நாட்டு மக்கள் என்றே, தாக்கடா வெற்றி முரசை," என முழங்கும் விடுதலைக் கவி. உழைப்பவனே உலகையாள வேண்டுமென்ற உண்மையை உரைக்கும் கவி. ஆணும் பெண்ணும் நாட்டிலே சமத்துவமாய் வாழவேண்டுமென்று சொல்லும் சமரசக் கவி. கைமையால் நைந்து கண்ணீர்விட்டுக் கதறும் கணக்கற்ற கன்னியர்களுக்கு, உடனடியாக விடுதலை வேண்டுமெனக் கேட்கும் உரிமைக்கவி. மதத்தின்பேரால் மனித சமூகத்தை, மூடத்தனமென்னும் இருள்சூழ்ந்த உலகிற்கு இழுத்துச் செல்லும் சழக்கர்களை, சமூகத்தின் துரோகிகள் எனச் சொல்லும் புரட்சிக்கவி. பிரான்சு நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிஞன் 'ரூஸோ' எழுப்பிய சுதந்திரம், சமத்துவம். சகோதரத்துவம் என்ற மூன்று அரிய தத்துவங்களின் அடிப்படையில், தமிழரும் எதிர்காலத்தில், தமது சமூகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற சமத்துவ சிந்து பாடும் கவிதான் பாரதி தாசன்!

சமூகத்தின் தற்கால நிலைமையை தலைகுப்புறக் கவிழ்த்து, மாற்றஞ் செய்யவேண்டு மென்கிற கவி பாரதிதாசனை, அழிவு வேலைக்காரரென்றும், நாத்திகரென்றும்

நவில்கின்றனர், இருபதாம் நூற்றாண்டிற்கூட இந்நாட்டின் கண்மூடிகள். ஆங்கில நாட்டின் அறிவுக்கவியான ஷெல்லி யின் -இதயபாங்கை யறியாத அந்நாட்டுக் கண்மூடிகள், ஷெல்லி தெய்வத்தைத் தூஷிக்கிறானென்று குற்றஞ்சாட்டி, கலாசாலையிலிருந்து அவரை விரட்டியதோடன்றியும், அவருடைய குழந்தையைக்கூட, அவர் வளர்க்கக்கூடாதென்று கூறி, அவரிடமிருந்து அவர்தம் பிள்ளையைப் பறித்த பாதகச் செயலையறிந்தோர் ஏற்நார், 'பாரதிதாசனை அழிவு வேலைக்காரரென்று கூறும் அபாண்டத்தை! புரட்சிக்கவி பாரதிதாசன் உண்மையில் அழிவு வேலைக்காரரா? அல்லது நாத்திகரா? பாரதிதாசன் நாத்திகருமல்லர், ஆத்திகருமல்லர்! தம் அறிவுக்கு ஏற்றதை எவருக்கும் அஞ்சாமல் பட்டவர்த்தனமா வெடுத்துரைப்பவர் பாரதிதாசன். பரம் பொருளின் பேராலும், சமயத்தின் பேராலும் கொள்ளையடிக்கும் பகற்கொள்ளைக்காரர்களுக்கு பாரதிதாசன் புரட்சிக் கவிஞர்தான். மக்களின் கவிஞராகக் காட்சியளிக்கும் புரட்சிக்கவி பாரதிதாசனின் புதுமைக் கருத்துள்ள எழுத்தோவியங்களைக் கண்டு, மதத் தலைவர்கள் மருண்டு மிரள்வதிலே புதுமையும், ஆச்சரியமுமில்லை! அது அவர்களுடைய இயல்பு! வால்டையர் ரூசோவின் எழுச்சியூட்டும் எழுத்தோவியங்கள் பிரெஞ்சு நாட்டு பாதிரிமார்களுக்கு எட்டிக்கொட்டையாக இருந்தன வென்பதை, அந்நாட்டுச் சரித்திர ஏடுகள் நமக்கு எடுத்துக் காட்டவில்லையா? சிந்தனைக்குச் சிரிய வேலையைத்தரும் புதுமைக் கருத்துக்கள் பொலியும் பாரதிதாசனின் பாடல்கள், பழமை விரும்பிகட்குப் பலிபீடமாயிருப்பதை யேற்றுக்கொள்ள முடியாத அவர்களின் எதிர்ப்பு முன்னணியின் ஆயுதந்தான், பாரதிதாசனை நாத்திகரென்று நவில்வதாகும். பழ

மைக்கு மாறான கருத்தைப் போதித்தப் பேரறிஞர் யாவருக்கும், பழமைவாதிகள் வழக்கமாக நல்கிய பட்டந்தான் நாத்திகரென்ற சொல்! அறிவுக் கவிஞரான அன்பர் பாரதிதாசனுக்கு, இந்நாட்டுப பழமை விரும்பிகள் பரிசாக வளித்த நாத்திகப் பட்டம், பழமை விரும்பிகளின் பரம்பரை வழக்கத்திற்கு, மாறானதன்று! உலகம் உருண்டையென்ற உண்மையை யுரைத்த இந்துதேச 'ஆரியப் பட்டனை' குப்த இராஜ்யம், அடித்துத் துரத்தி உயிர்வாங்கவில்லையா? கிரேக்க கலையுலகின் கலங்கரை விளக்காய் விளங்கிய கவியரசர் 'ஹோமர்' உலகில் உயிரோடு உலவும்போழ்து உண்ண உணவிற்கு வழியற்று, கண்களையு மிழந்து, கைநீட்டி, ஊர்தோறும் உண்ணஉணவு பெற்று, தளர்ந்து தள்ளாடி தத்தளித்து, ஏனென்று கேட்பாரற்று, மனமுடைந்து மாண்டார்; ஆனல் அவர் ஆவிதுறந்தபின், அவருடைய மறைவிற்காக, ஏழு நகரங்கள் கண்ணீர் உகுத்தனவென்பது உலகறிந்த உண்மையன்றோ? இத்தாலிய நாட்டின் உயர்விற்காக உழைத்தும், கவிதை கட்டியும், அரும்பாடுபட்ட கவி 'தாந்தே'யை இத்தாலிய நாட்டுச் சமுதாயம் போற்றவில்லை! போற்றாவிடினும் பாதகமில்லை; ஆனல் அவரை இத்தாலிய மண்ணிற் குள்ளேயே, காலடி யெடுத்து வைக்கக் கூடாதென்று கட்டளையிட்டது, அன்றைய இத்தாலி கிரேக்கநாட்டில் காலனின் பாசத்திற்குப் பலியான கவி தாந்தேயை, கல்லறையிற் புதைத்த கிரேக்கருடன் போராடி, உயிரற்ற உடலைப்பெற்று, இத்தாலியில் கவி தாந்தேயுக்கு மாளிகை யெழுப்பினர்கள், முன்னே துரத்தியடித்த இத்தாலியர்! இத்தகைய உண்மைகளிலிருந்து இலட்சிய வாதிகள் இன்றில்லாவிடினும் நாளை புகழப்படுவது மட்டுமன்றி, அவர்களுடைய இலட்சியத்தை யடைய,

இலட்சியவாதிகளின் கொடியை முன்னே தூற்றியவர்களும், தாங்கி போராடுவார்களென்று உறுதி கூறுவதுபோல, வரலாறுகள் விளம்புகின்றன. இதுபோல் இன்று பாரதிதாசனுக்கு, உண்மையிலேயே வரவேண்டிய பெயரையும், பொது மக்கள் ஆதரவையும், தடை செய்யும் மேகங்கள் மறைந்தே தீரும். இது உலக வரலாறு விளம்பும் உண்மை! அன்று பாரதிதாசனென்றால் யாரென்று கேட்குந் தமிழனிலன். பாரதிதாசன் பாட்டால் சித்தரித்துக் காட்டிய நமது நாட்டின் புதுஅமைப்பு, இது தானென்று அன்று புன்னகை பூத்த முகத்தோடு பெருமிதமாய்க் கூறுவான்! அந்த நாள் என்று வரும்?

பிறப்பின் பூர்வ கதை

தமிழ்நாட்டின் தற்கால அவல நிலையினைச் சித்தரித்துக் காட்டும் தன்மையிலுள்ளது, பாரதி தாசனின் பிறப்பிடமான பாண்டிச்சேரி. தமிழ் நாட்டிலுள்ள, பாண்டிச்சேரி, காரைக்காலென்ற இருநகரங்களைமட்டும், புதுவுலகத்திற்கேற்ற புதுப்பாதையைவகுத்த பிரான்ஸ், பிடித்தாளுவதை நினைக்கும்போது, பதினாறுவது 'லூயி'ன் ஆட்சி, எங்கட்கு வேண்டாமென்று கூறி, மன்னனைப் பலிபீடத்திலே நிறுத்தி, அவனைக்கொன்று, குடியரசுக்கொடியை நாட்டிய ஜனநாயகப் பிரெஞ்சு பிரஜைகளின் பரம்பரைதானா, இந்த இருபதாம் நூற்றாண்டில், அன்னிய மக்களான காரைக்கால் புதுவை வாசிகளை அடக்கி ஆண்டுவருகிறதென்று நாம் நினைக்கின்ற, பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட பாண்டிச்சேரிதான், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறப்பகமாகும். பாண்டிச் சேரியிலேயுள்ள பிரபலமான குடும்பங்களிலொன்றுதான் பாரதிதாசன் குடும்பம்.

பாண்டிச்சேரியிலேயுள்ள பிரபல மளிகை வியாபாரியான கனகசபை முதலியாரை, புதுவையிலே தெரியாதவரே இரார். இந்த பிரபல வியாபாரியான கனகசபை முதலியாரின் திருமகனுரே பாரதிதாசன்! பாரதிதாசன் 1891-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி பிறந்தார். பாரதிதாசனின் தந்தையரான கனகசபை முதலியார் பழுத்த சைவர். ஆஸ்திக ஆகமங்களிலே ஆழ்ந்த ஆர்வமுள்ளவர். சேற்றினிடையே செந்தாமரை மலர்வது போல, பழுத்த சைவ குடும்பத்திலே பிறந்த பகுத்தறிவுக் கதிரவனே பாரதிதாசன் பாரதிதாசனென்று பெருமையுடன் புரட்சிக் கவிஞரை தமிழர் அழைக்கின்றனரே, அது இவருடைய இயற்பெயரன்று! பாரதிதாசனுடைய பெற்ருேரால் அவருக்குச்சூட்டப்பெற்ற பெயர் 'கனக. சுப்புரத்தன' மென்பதாகும்!

கல்விக் கூடத்தில் கவிஞர்!

கனக சுப்புரத்தினம் வயது வந்தபின்னர் தமது தந்தையார் கனகசபை முதலியாரால், கல்வி கற்க பிரெஞ்சு பாஷைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பாரதிதாசன் பிரெஞ்சு பாஷைப் பள்ளிக்கூடத்திற் படித்தாலும், அங்கு இவர் கல்விபயின்ற காலம் மிகசொற்பமேயாகும்! ஆனல் பாரதிதாசன் தமிழ்ப் பள்ளியிற் பயின்றகாலந்தான் அதிகமானது. படிப்பென்ருல் வேப்பங்காயென்றெண்ணி, விளையாட்டுத்தனத்திலே புத்தியைச்செலவிட்டு, பள்ளிக்குச் செல்லாது, தம் பள்ளிக்கூட வாழ்வில் ஒரு நாளைக்கூட வீணுகக் கழித்தவரல்லர், நம் கவிஞர்! கண்ணுங் கருத்துமாயிருந்து, கல்வியை வெகு விரைவில் கற்றுக்கொண்டு விட்டார். பாரதிதாசன் பிரெஞ்சுமொழியைவிட தமிழ்

மொழியைத்தான் அதிக ஆவலாய்க் கற்ருர் பாரதிதாசன் தமிழைப் பிரியத்தோடு பயின்றமைக்கு இவருக்கு தமிழாசிரியர்களாக வாய்த்த, பேராசிரியர்களான பங்காரு பத்தர், பெரியசாமிப் புலவர்கள் தானென்று கூருமலிருக்க முடியாது! இவ்விரு ஆசிரியர்களின் இனிமையான குரலுடன் கூடிய கவிதா விளக்கங்கள்தான் கவி கனக சுப்புரத்தினத்திற்கு, தமிழ்ப்பற்றை தந்ததென்று கவிஞரைப்பற்றி அதிகமாகத் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

பாரதிதாசன் பள்ளிப் புத்தகங்களைமட்டும் படித்து புத்தகப் பூச்சியாய் வாழ்ந்தவரல்லர்! படிக்கும் பொழுதே நாட்டின் நிலையை நன்கறியத்தக்க நூல்களைப் படித்தும், சிலவற்றைப் பிறரிடம் கேட்டும் அறிந்தவர். பள்ளிமாணவராக இருந்த பாரதிதாசனுக்கு மிகவும் பிரியமானது பாட்டுப் பாடுவது. பாட்டுப் பாடுவதிலே தேர்ந்த கனக சுப்புரத்தினத்திடம் நல்லநடிப்புமிருந்தது! பாட்டுக்கும் நடிப்புக்கும் உறையுளாக விளங்கிய பாரதிதாசனை பள்ளிக்கூட மாணவரும், நிர்வாகிகளும் பயன் படுத்திக்கொள்ளாமல் விட்டுவிடுவார்களா? ஆண்டுதோறும் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் நாடகத்தின், கதாநாயகனின் நடிப்புப் பகுதியைப் பாரதிதாசனுக்கே உரிமையாக்கிவிட்டார்கள் பள்ளிக்கூட நிர்வாகிகளென்றால், பாரதிதாசன் நடிப்பில் தேர்ச்சியுற்றவரென்று கூறவும் வேண்டுமோ? படிப்பதற்காகப் பள்ளிக்கூடம்போன பாரதிதாசன், பாட்டுகள் புனைவதிலும், பாடுவதிலும், நாடகத்திலே நடிப்பதுமாக விருந்தபோதிலும், படிப்பிலே பாரதிதாசன் பிற்போக்காய்ப் போனதில்லை. ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணயிருக்க, கனக சுப்புரத்தினம் தவறினதேயில்லை தமிழ்ப் புலவர் தேர்வுகுறித்து 16 வயதிலே புாண்டிச் சேரியிலுள்ள

'காலவே கல்லூரி'யில் சேர்ந்த கவிஞர், இரண்டே ஆண்டு களில் தம் வகுப்பில் வாசித்த முப்பது மாணவர்களில் முதல்வராய்த் தேறினரென்றால், இவருடைய முயற்சியின் தன்மையை என்னென்று இயம்புவது?

புலவர் பாரதிதாசன்

பாரதிதாசன் அவர்களதுப் படிப்பு 1909-ஆம் ஆண் டோடு முடிவுற்றது. பதினெட்டாம் வயதிலேயே புலவர் பட்டம்பெற்ற பாரதிதாசன், அவ்வாண்டிலேயே தமிழாசிரிய ராக பிரெஞ்சு அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டார். அர சாங்கக் கட்டளைக்கேற்ப, பாரதிதாசன் முதல்நாள் பதவி யேற்க பள்ளிக்குப் போனபோது, மாணவர்கள் கவிஞரை, புதிதாகப் பள்ளியிற் சேர்ந்த மாணவரென நினைத்தனர். ஆனால் பள்ளிக்கூடம் ஆரம்பமானவுடன் புதிய புலவரான பாரதிதாசனை, பள்ளியின் தலைமையாசிரியர் வகுப்பிற்கு அழைத்துவந்து, அறிமுகம் செய்தபோது மாணவர்கள் இறும்பூதெய்தினர். மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிதாயிருக்கலா மென்பதை, அன்றுதான் அப்பள்ளி மாணவர்கள் உணரத்தலைப்பட்டனர். அன்றே, பாரதி தாசனின் தமிழ்ப்பணி ஆரம்பமான நன்னாள்!

எதிர்பாராத சந்திப்பு!

1908-ஆம் ஆண்டு பாரதியாரால் பிரசுரிக்கப்பட்டு வந்த 'இந்தியா' வென்ற வாரப் பத்திரிகையின் பிரசுர கர்த்தர்மீது, இராஜத்துவேஷ வழக்குத் தொடரப்பட்டு அவரை அரசியலார் கைது செய்தனர். அப்பத்திரிகை யின் பிரசுரகர்த்தரைக் கைது செய்ததோடன்றியும், பாரதியாரின் மீதும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கப்

போவதாக வதந்தியிருந்தது. 'இந்தியா' பத்திரிகையும் நின்றுவிட்டது. சுதந்திரமே சுவாசமெனக் கருதி தேசத் தொண்டாற்றிவந்த பாரதியார், அதிகாரவர்க்கத்தாரால் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டுக் கைதியாகக் காலங் கழிப்பதை வெறுத்தமையாலும், வேறு சில நண்பர்களின் ஆலோசனையின் பேரிலும், பாரதியார் புதுச்சேரி சென்றுக் குடியேறினர். புதுவையிற் குடிபுகுந்த பாரதியாருக்குப் பல நண்பருண்டு. அவர்களில் ஒருவருக்கு இச்சந்தர்ப் பத்தில் திருமணம் நடந்தது. நண்பரின் திருமணத்திற் குப் பாரதியாரும் வந்திருந்தார். இந்த திருமணத்திற்குப் பாரதியாருக்கு அறிமுகமாகாத புலவர் பாரதிதாசனும் வந்திருந்தார். திருமணத்திற்கு வந்திருந்தோர் யாவரும் விருந்துண்டபின், பாடகர் பாரதிதாசனைப் பார்த்துவிட்டு சும்மா விட்டு விடுவார்களா ? 'செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்' என்ற வள்ளுவனாரின் வாக்கியங்களை தலைகீழாகத் திருப்பிவிட்டனர். வயிற்றுக்கு ஈந்தபின் செவிக்கு ஈய முயன்றனர், திருமணத்திற்கு வந்த நண்பர்கள். செவிக்கு விருந்தளிக்கும் இக்கைங்கரியத் தைப் பாரதிதாசன் ஏற்றுக்கொண்டு, தேசீய மணங்கமழும் பாரதியாரின் பாடல்களைப் பாடினர். பாரதியாரின் பாடல் களைப் பாடுகின்ற பாரதிதாசனுக்கு, பாரதியார் அங்கு அமர்ந்திருப்பது தெரியாது. பாடல்களை யெல்லாம் பாடி முடித்தபின் பாரதிதாசனுக்கு, பாரதியாரை அங்குள்ளோர் களால் அறிமுகப்படுத்தப்பட்டது. பாரதியாரை முதன் முதல் சந்தித்தபொழுது பாரதிதாசன் அடைந்த ஆனந் தத்தின் ஆழத்தை, பாரதிதாசனைத்தான கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்! பாரதிதாசனும் பாரதியாரும் அன் றையிலிருந்தே, பாரதியாரின் மரணம்வரை இணைபிரியாத

நண்பர்களாய் வாழ்ந்து வந்தார்களென்று இயம்பவும் வேண்டும்மா ?

கவியான கதை !

தேமலரைத் தேடிவரும் தேனீக்கள் போலவும், வானைத் தழுவவரும் வெண்ணிலவைப் போலவும், புதுவையிலே வாழ்ந்துவந்த பாரதியாரை, விடுதலை விரும்பிகளும், தமிழுணர்ச்சிக்காரர்களும் சூழ்ந்திருப்பார்கள். பாரதியாரைச் சூழ்ந்துகொண்டு பல நண்பர்கள் இருக்குமோர் சமயத்தில் சற்றுக் கோபத்தோடு "சுப்புரத்தினம் கவியெழுதக் கூடியவனென்பது உங்கட்குத் தெரியுமா ?" வென்று கேட்டார். பாரதியார் இப்படிச் சொன்னவுடன் அவருக்கு எதிர்ப்பான முறையில் "எங்கே எழுதச் சொல்லுங்களேன் பார்ப்போம்" என்று மற்றவருரைத்தனர். பாரதியார் மறுகணம் பாரதிதாசனைப் பார்த்து "பாடு" என்றார். உடனே பாரதிதாசன் 16 வரிகளுள்ள அழகான பாடலை இயற்றினார். அதுதான் இது !

எங்கெங்கு காணினும் சக்தியடா !—தம்பி
எழுகடல் அவள் வண்ணமடா ! —அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா—ஒரு
கங்குலில் ஏழுமுகிலினமும்—வந்து
கர்ஜனை செய்வது கண்டதுண்டோ ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா !
காளை ஒருவன் கவிச் சுவையைக்—கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறி வாளர்திறம் பெறுவான்—ஒரு

வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையமுழுவதும் துண்டுசெய்வேன்—என
நீளஇடை யினின்றி நீநினைத்தால்—அம்மை
நேர்படுவர்ள் உன்றன் தோளினிலே!

"பாடு" என்று பகர்ந்தவுடன் பாடல் புனைந்ததைக் கண்ட நண்பர்கள், பாரதிதாசனின் புலமையை போற்றினர்கள். பாரதியாரும் பரமானந்தமடைந்தார். பாரதிதாசன் முதன் முதல் புனைந்த, 'எங்கெங்கும் காணினும் சக்தியடா' வென்ற பாடலை பாரதியாரே தமது கையால் எழுதி, அதன் தலைப்பில் 'ஸ்ரீ சுப்பரமண்ய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது' எனக் குறித்து "சுதேச மித்திரன்" பத்திரிகைக்கு அனுப்பினர். வசிஷ்டன் வாயால் ரிஷியென்ற பட்டம் வாங்குவது பிரம பிரயத்தனமல்லவா? அதைப் போல் முதிர்ந்த அறிஞனெருவனல் மற்றெரு விளம்பர மில்லாத அறிஞன், அறிஞனென்று அழைக்கப்படுவதில் இளம் அறிஞனுக்கு அதனல் பெருமையல்லவா? இத் தகைய அரிய நிலை, அன்பர் பாரதிதாசனுக்கு "சுப்புரத் தினம் ஓர் கவி" யென்று ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார் பிற ரிடம் சொன்னபோதுக் கிடைத்தது. இங்ஙனம் பாரதி யார் பாரதிதாசனைப்பற்றிக் கூறியபோது, பாரதிதாசன் அடைந்த இன்பத்தை இறுதி கட்டிக்கூற கற்பனையாலுங் கூடுமோ? "ஸ்ரீ ஒரு கவி" யென்று பாரதிதாசனைத் தவிர, வேறு யாரையும் மகாகவி பாரதியார் குறிப்பிட்டது கிடையாதென்றே கூறலாம். பாரதியார் மறைந்த பின்னர், பாரதியாருக்கு தமிழ்க்கவிதா உலகத்திலிருந்த உன்னத இடத்தில் இன்று கொலுவீற்றிருப்பவர், புரட்சி கவிஞர் பாரதிதாசனே!

தேசீயக் கவி

பாரதியாரும், பாரதிதாசனும் தேசீய இயக்கத்தில் பிறந்த குழைந்தைகளாவர். பெற்ற தாயை போற்றி வளர்க்க வேண்டியது மகனுடைய கடமையல்லவா? பாரதியார் இதைத்தான் அன்று செய்தார். பாரதிதாசனும் இன்று அதைத்தான் செய்கிறார். பாரதியார் தன்னைப் பெற்றெடுத்த தேசீய இயக்கத்திற்காகப பாடுபட்டார். பாரதியாருடன் பாரதிதாசனும் தம்மைப் பெற்றெடுத்த தேசீய இயக்கத்திற்குச் சேவை செய்துளார். தேசீய இயக்கத்தின் வளர்ச்சி பாரதிதாசனின் மூச்சாக இருந்தது பாரத நாடு பாங்கியருடன் ஒத்துழையாமைப் போராட்டத்தை ஒப்பற்ற முறையில் நடத்திக் கொண்டிருந்த பொழுது, புரட்சிகவி பாரதிதாசன் தமது எழுச்சியூட்டுங் கவிதைகளின் மூலம் நாட்டு மக்களை தட்டி எழுப்பினர். ஒத்துழையாமை காலத்தில் பாரதிதாசனது பாடல்களை தமிழ் நாட்டின தலை சிறந்த எழுத்தாளரான வ ரா. அவர்கள், தாம் நடத்திவந்த சுதந்திரன் பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். அன்று பாரதிதாசன், தேசீயக் கவி. அன்று பாரதிதாசன் இந்திய நாட்டின் ஏனைய மக்களின் கவியாக விளங்கினர். ஆனல் இன்றோ புரட்சிக்கவி பாரதிதாசன் சுயமரியாதைக் கவியாக, திராவிடரின் கவியாக திகழ்கிறார். புரட்சிக் கவிஞரின் வாழ்க்கையில் இந்த மாறுதல் ஏன்?

சேர்மாதேவி குருகுலத்தில் வ. வே சு. அய்யர் அவர்கள், பிராமண மாணவர்க்குத் தனியாக உணவும், பிராமணரல்லாத மாணவர்கட்குத் தனியாக உணவும வழங்கியதை கூடாதெனக் கூறி, காங்கிரசில் கிளர்ச்சி செய்த ஈ. வே. இராமசாமி பெரியார், டாக்டர் வரதரா

ஜாலு நாயுடு முதலியவர்களது முயர்ச்சிகள் தோல்வி யுற்றமையால், அவர்கள் சுயமரியாதை இயக்க மொன்று தனித்தோர் இயக்கம் ஆரம்பித்தனர். சாதி சமய பூசல்களை அறவே களைவதாக ஆர்ப்பரித்தது சுய மரியாதை இயக்கம். சாதிசமய பேதங்க ளொழிந்தால்தான் நாட்டிற்கு நலமென நினைத்த பலரை, சுயமரியாதை இயககம் ஆகர்ஷித்தது. இம்மாதிரி ஆகர்ஷிக்கப் பட்டவர்களுள் அன்பர் பாரதிதாசனும் ஒருவர். பாரதிதாசன் பதினெட்டு ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தின் கவியாகவும், அவ் வியக்கத்தின் பிரபலஸ்தராகவு மிருந்து வருகிறார். பாரதிதாசன் சு. ம. கவியே யானாலும், அவருடைய கவியினால் தேசத்திற்கு ஊறு விளைகிறதென்று யாராலுங் கூற முடியாது. சமூதாயக் கொடுமைகள் அறவே அழிக்கபட வேண்டு மென்று கூறுகிறார் பாரதிதாசன். இவ்வரிய உண்மையை தேசிய இயக்கம் வேண்டாமென்று தடுக்கிறது? இல்லையே! நாட்டிற்கு விடுதலை வந்தவுடன் தானாகத் தொலைந்து விடுமென்று தானே கூறுகிறது தேசிய வாதிகளால் பின்னால் கவனிக்கப்பட வேண்டிய விஷயத்தை முன் கூட்டிச் செய்கிறார் பாரதிதாசன். ஆகவே, அவர் தேசிய இயக்கத்தின் விரோதியல்லர்! பாரதிதாசனை தேசிய இயக்கத்தின் கவி யென்றே கூறலாம்.

பார்வைக்குப் பாரதிதாசன்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு வயது ஐம்பத்தைந் தாகிறது. வயது ஐம்பத்தைந்தே யாயினும், பார்வைக்கு பாரதிதாசன் இளைஞரைப்போல், எழிலுடன் தோற்றமளிப்பார். சீமை இலந்தைப் பழத்தின் செங்காய் வெட்டு நிறத்திற்குச் சமமான செம்பொன் நிறம். பறந்துநிமிர்ந்த நெற்றி

யும், கருத்த விழிகளும், சாந்த நகையுடன் கூடிய சிந்தனைப் பார்வையும், குன்றெடுக்குந் திண்ணிய தோளும், கொடையளிக்குங் கரங்களையுடையவர். தென்றலைப் போல, தமிழை திசையெங்கும் பரப்பிட சித்தங் கொண்டவர் ஏற்றக் கொள்கைக்காக எண்ணற்ற இடர்கள் அவரை அலைகள் போல் வந்து மோதினும் அஞ்சாத இதயம் படைத்தவர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனது உடல் உள்ளப்பண்பினது சித்திரமாவது! இவ்வினிய ஓவியம் தமிழரெல்லாருடைய இதயகோவிலிலும் அமரத்துவமாய் அமர்ந்திருக்க வேண்டியதாகும். பாரதிதாசன், பாமரமக்களின் கவி! பாமர மக்களின் முன்னேற்றத்தைக் கருதும் பாரதிதாசன், பாமர மக்களால் போற்றப் படவேண்டியவர். செய்நன்றி மறக்காத செந்தமிழர், பாரதிதாசனைப் போற்றுமலிரார்; போற்றியே தீர்வர். பாரதிதாசனை வெகு விரைவிலே புகழுங்காலம் வரும்.

கவியின் கனவு

புரட்சிக்கவி பாரதி தாசனுக்கு நீண்ட நாட்களாக ஒரு கனவு உண்டு. தூங்கிக்கொண்டிருந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய எட்டையபுர சுப்பிரமண்ய பாரதியார், பாண்டிச்சேரியிலிருக்கும் பொழுது, தம்முடைய தோழர்களிடம் தமிழாக்கம் கருதி, கூறிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது தான் அந்தக்கனவு. அந்த திட்டம் தான் என்ன? தமிழிலக்கியப்பணிபுரிய, இளைஞர்கள் பலரை ஒன்று கூட்டி, அவர்கட்கிருக்கும் கவிதா சக்தியை அதிகப்படுத்தி அவர்களைத்தமிழிலக்கிய, சேவகர்களாகச் செய்யவேண்டும் இப்படி இளம் இலக்கிய வாதிகள் குழுமியிருக்குமிடத்திற்கு கவிதாமண்டலமென்று பெய

ரமைக்கும்படி பாரதியார் கூறினர். பாரதியார் இந்த அற்புதமான திட்டத்தை பாரதி தாசனிடம் மட்டும் கூறவில்லை! பாரதியாரிடம் நெருங்கிப் பழகி இன்றும் உயிரோடு வாழ்ந்து வரும், அவருடைய நண்பர்கள் பலரிடத்தும் கூறியதுதான். ஆனல் இந்த அற்புதமான திட்டத்தை காரியாம்சத்திற் கொண்டுவர பாரதிதாசன், அன்ரிலிருந்து இன்றுவரை படும்பாட்டை, கவிஞரோடு நெருங்கிப் பழகுபவர்கள் நன்கறிவார்கள்.

பாரதியாரின் சிந்தனையிலே பிறந்த கவிதா மண்டலத்தை, காரியாம்சத்திற் கொண்டு வருவதெனின், அது எளிதில் முடிகிற காரியமா? மன்னுதி மன்னர்களாலேயே போற்றி வளர்க்கப்பட்ட தமிழ்ச்சங்கம்,தற்பொழுது அடைந்திருக்கும் நிலையை நினைக்கும பொழுது, கவி பாரதி கூறியதுபோல "நெஞ்சு பொறுக்கு தில்லையே, இந்த நிலை கெட்ட மானிடரைநினைந்து விட்டா" லென்பதைத் தவிர வேறென்ன செய்யமுடியுமென விசாரப்படும்பொழுது. பாரதிதாசன் கவிதா மண்டலத்தை அமைப்பதென்ருல்? பாரதிதாசனென்ன, குறுநில மன்னரா? அல்லது மிட்டாதாரா? பாரதிதாசன் பெரும்புலவரே தவிர, பணக்காரரல்லரென்பதால், பாரதியின் கனவை நிறைவேற்றும் முயற்சியில், இறங்காமலிருந்த தென்பதில்லை! பாரதிதாஸன் பல ஆண்டுகட்கு முன்பு, பாண்டிச்சேரியிலிருந்தோர் பத்திரிகை நடத்தினர். அது என்ன பத்திரிகையென்று கூறவும் வேண்டுமோ? அதுதான் கவிதா மண்டலம்.

கவிதாமண்டலமென்றவுடன் பாரதிதாசன், பாரதியார் சொல்லிப் போந்த கலைஞர் குழுவைக் கூட்டி அதிலிருந்து தான் கவிதா மண்டலமென்ற பததிரிகை நடத்தினு

ரென்று நினைத்து விடாதீர்கள். இப்படிச் செய்ய அவருடைய பொருளாதார நிலைமட்டும் இடங்கொடுத்திருந்தால், பாண்டிச் சேரியில் மட்டுமல்ல; தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம், கவிதாமண்டலத்தை அமைத்தே தீர்வார். பாரதிதாசனுக்கு பொது நலசேவை செய்வதில் அதிக ஆவலுண்டு! ஆனல் இப்பொழுது பாரதிதாசன் ஆரம்பித்த கவிதாமண்டலம் பத்திரிகைதான். கவிதாமண்டலம் தமிழ்பத்திரிகா உலகத்திற்கே புத்துணர்ச்சி, ஊட்டத்தக்க முறையில் அமைந்திருந்த முதல் பத்திரிகை. இன்றுவரை தமிழகத்தில் கவிதையையே முழுதும் கொண்டு வெளிவந்த பத்திரிகை, கவிதா மண்டலத்தை தவிர வேறு கிடையாது. கவிதாமண்டலம் கலைக்கோயிலை அழகு படுத்துகின்ற முறையில் வெளிவந்து கலையுணர்ச்சியை தமிழ் மக்கட்கு வழங்கி வந்தது. கவிதாமண்டலத்திற்கு, தமிழ்க் கலைஞர்களிடம் நல்ல மதிப்பு இருந்தது. ஆனல் பள்ளியாசிரியர் பதவியேற்றிருந்த பாரதிதாசன் அவர்கட்குப் போதிய ஒய்வின்மையாலும், தமிழ் மக்களின் ஆதரவு அதிகமின்மையாலும், கவிதா மண்டலம் தோன்றிய சில ஆண்டுகட்குள்ளேயே, நிற்க வேண்டி வந்தது! கவிதாமண்டலம் நின்று போய் விட்டாலும, அன்பர் பாரதிதாசன் மீண்டும் கவிதா மண்டலம் போன்ற கவிதைகளைக் கொண்டு வெளிவரும் முழுக்கவிதைப் பத்திரிகையையும், பாரதியார் கூறிய கவிஞர்கள் கூடிய, கவிதையியற்றும் குழுவான கவிதா மண்டலத்தையும் நடத்த துடிதுடித்துக் கொண்டிருக்கிறூர் நாட்டிற்கேற்ற இந்த நன்முயற்சியை நிறைவேற்ற, தமிழ்ப் பொது மக்களும், புலவர்களும் பாரதிதாசனுடன் ஒத்துழைப்பின், அத்தொண்டு தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் நன்மையாகும். தமிழகத்தின் நன்மைக் கேற்ற இப்பணியை, பாரதி

தாசன் நிறைவேற்ற, தமிழர்தம் ஒத்துழைப்பை, பாரதிதாச னுக்கு நல்குவார்களா ?

புரட்சிக்கவிஞரும் தமிழிசையும் !

மும்முடியும் முக்குடையும், மும்முரசும் முத்தமிழுங் கொண்டு, தமிழகம் தலைநிமிர்ந்து நின்ற நேரத்தில், தமிழன் பூரிப்படைந்தான் ! காலமாறுபட்டாலும், அன்னியர் படையெடுப்பாலும், மேற்கூறிய நமதுநிலை நசித்துப் போய்விட்டது. இழந்து விட்ட அரிய நிலையை மீட்டும் அடைய தமிழகம் துடிக்கிற தென்று கூறவும் வேண்டுமோ? பசித்தவன் புசிக்க விரும்பாமலும், பொருளை இழந்தவன், அப்பொருளைத் தேடிப்பெற விரும்பாமலும் இருப்பானோ ? அதுபோலவே அன்று தமிழன், தான் இழந்த அரசையும், கலையையும், இன்று மீண்டும் பெற முயல்கிறான். மொழி யுணர்வு தோன்றினால் தான் நாட்டுணர்வு தோன்றுமெனக் கூறும் அறிஞர்தம் நல்லுரைபோல, தற்பொழுது தமிழகத் தில் தாய் மொழியுணர்வும், தாய் நாட்டுப்பற்றும் தோன்றி யுள்ளது !

தற்பொழுது தமிழரிடையே தமிழுணர்வு தோன்றிய மைக்குக் காரணம், பாரதிதாசனது உணர்ச்சிததும்பிய பாடல்கள்தானென்று கூறாமலிருக்க முடியாது. இது போன்றே இன்றெழுந்துள்ள இசைக்கிளர்ச்சிக்கும் பாரதி தாசனுக்கும் அதிக சம்பந்தமுண்டு. தமிழகமெங்கும் தமி ழிலேயே இசைவாணர்கள் இசை பாட வேண்டும். தமி ழர் தமிழிசையைக் கேட்டலே, தமிழர்தம் மானத்திற்கேற் றதென்று பாரதிதாசன், சென்னை டாக்டர் மே. மாசிலா மணி முதலியார் நடத்தி வந்த "தமிழரசு" பத்திரிகை யில் எழுதிவந்தார். தமிழரசு பத்திரிகையின், சங்கீத வித்

துவான் பகுதியில் பாரதிதாசன், இசைவாணர்கள் தமிழி லேயே பாடுவதற்கு மறுக்கமுடியாத முறையிலும், தமிழ்மக்கள் தமிழிசையை விரும்பவேண்டுவது குறித்து விளக்கமாக எழுதிய எழுச்சியுறுங் கட்டுரைகள், இளந்தமிழர் பலருடைய உள்ளத்தைக் குமுறச் செய்திருக்கின்றன. இந்த குமுறல் சிலஇடங்களில், பலருடைய இதயத்தைப் பிளந்து வெளிப்பட்டதாயினும், இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய முயற்சியினாலேயே, தமிழிசை இயக்கம் தலைதூக்க முடிந்தது. ஜெர்மானிய இசையாதிக்கத்தால் பொலிவிழந்துபோன போலிஷ் இசையை, பொலிவுறச் செய்த போலீஷ்புலவன் ஷோபன்போல தன்னொளி யிழந்த தமிழிசையை ஒளி பெறச் செய்த தலையாயத் தொண்டு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடையதே. தமிழும், தமிழிசையும் ஆக்கம் பெற, ஊக்கமுடன் உழைக்கும் பாரதிதாசனுக்கு எதிர் காலத்தில் தமிழகம் தலைவணங்கும்.

பாரதிதாசனின் மாணவர்கள் !

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இன்றைக்கு ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழ்மொழிக்கும் தமிழருக்கும், இடைவிடாத சேவை செய்து வருகிறார். இவ் விணையற்ற தமிழ்ப் பணியில், பாரதிதாசனால் சிருஷ்டிக்கப் பட்ட கவிதைகளும், எழுத்தோவியங்களும் பல! ஆவேச நடையில் அறிவுக்குப் பொருத்தமான, காலத்தின் கருத்தைப் பிரதிபலித்து வெளிவந்த பாரதிதாசன் கவிதைகட்கு மனத்தைப் பறிகொடுத்தோர் பலர். புரட்சிக் கவிஞரின் பாடல்களில் தம்மனத்தைப் பறிகொடுத்த பலர், கவிஞரின் மாணவராயினர். இங்ஙனம் மாணவராயினோரில்

சண்டு குறிப்பிடத்தக்கவர்கள், தற்பொழுது பெரும்புகழ் பெற்றுள்ள கவிஞர்கள் கம்பதாசனும், புதுவைச் சிவமு மாவர். பாரதியாருக்குப் பின், பாரதியாரின் நடையைப் பின் பற்றி, பாரதிதாசன் பாட்டுக்கள் புனேவது போல, பாரதிதாசனின் பிரதம சீடர்களான இவ்விருவரும் இன்றே பாரதிதாசனின் நடையைப் பின்பற்றி பாட்டுக்கள் புனேந்து புகழ் பெறுகின்றனர்.

கவிஞர் கம்பதாசனும், புதுவைப் புலவர் சிவமும், வருங்கால பாரதிதாசனின் வாரிசுகள்! இவ்விருவரைத் தவிர இன்னும் எத்தனேயோ பேர்கள், பாரதிதாசனிடம் பாடல் பயில்கின்றனர். பாரதிதாசன் அவர்களது தமிழ்ப் பணிக்கு, இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ?

வாழ்க வாழ்கவே!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நம்மோடு வாழ்ந்து வரு பவர். பாரதிதாசன், நாம் அனுபவிக்கும் சுகதுக்கங்களின் காட்சியைக் கண்டே கவிதை புனேகிருர். பாரதிதாசன் பாடல்களுக்கு இணே பாரதிதாசன் பாடல்களே! புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடவே பிறந்தவரென்பதை, பாரதி தாசனின பாடல்களும், வாழ்வின் வரலாறுகளும் உறுதிப் படுத்துகின்றன! பாரதிதாசன் வார்த்தைகள் ஒவ்வொன் றம் அக்ஷாலக்ஷம் பெறத்தக்கவையாகும். பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தின் கவியாகயிருக்கலாம்! அதற் காகப் பாரதிதாசனின் பாடல்களேயும், இலக்கிய சேவை யையும் நாடு இழக்கக் கூடாது! நாடு இழந்தால், அதனல் பாரதிதாசனுக்கு நஷ்டமில்லே, நம்முடைய நாட்டிற்குத் தான் நஷ்டம் பற்பல சாதிகளாய்ப் பிரிந்து கிடக்கும் பாரத நாடே! வாழ்கின்றுர் முப்பத்து முக்கோடி மக்க

ளென்றால், நம்மைச் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை யுள்ளதேயென நம் நாட்டின் நிலையை நாட்டவர்க்கு, தெற் றென எடுத்துக் காட்டும் பாரதிதாசன் பாட்டு, உன் எழுச் சிக்கு வாய்த்தல் அமுது.

பாரதமே! புரட்சிக் கவிஞர் பாரதி தாசனைப் போற்று! கவிஞனையும், கலையையும் போற்றுவதில், கட்சிக் காய்ச்சலைக் காட்டாதே! ரூஸோவின் எழுத்துக்களால்தான் பிரெஞ்சு மக்களின் எழுச்சிக்கு வழி காட்டியதென்று, பாஸ்வெல் வரைந்தது போலவும், வால்ட்டேரின் வாக்கு வன்மை யால் பிரான்சில் புரட்சிஎழுந்ததென்று ராப்பார்ட்ஜி இங்கல் சால்எழுதியதுபோலவும்; பாரதிதாசனது புரட்சிப்பாடல் களால் பாரதத்தில் பிறக்கப் போகும் புரட்சிப் புயலைப் பற்றி, வருங்கால சரித்திர ஆராய்ச்சியர்கள் வரைந்தே தீரு வார்கள்! நம்முடைய நாட்டின் மீது கவிழ்ந்துள்ள இரு ளடர்ந்த இரவு மறைய, நீண்ட நாட்களுக்குப் பின் தமிழக த்தில் தோன்றிய, கதிரவன்தான் பாரதிதாசன்! நீதிக்குப் போராடும் நேர்மையுள்ள நெஞ்சுள்ளவர்களும், அடிமை வாழ்வை விரும்பாதவர்களும், பாரதிதாசனை போற்றியே தீர வேண்டும். பாரதிதாசனின் பாடல்கள் விடுதலை வாதிகளின் போராட்டத்திற்கு பயன்படும் போர்வாள் போன்றதாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மில்டன் போன்று பள்ளியாசிரியராகவும், கோல்ட்சிமித் போன்று எழுத்தாள ராகவும், டெடவோ போன்று பத்திரிகை யாசிரியராகவும், பிரான்ஸ் நாட்டுப் புலவன் ராஷின் போல நாடக எழுத் தாளராகவும், நடிகராகவும் தம் வாழ்நாளில் வாழ்ந்து வந் துள்ளார்! தமிழ் மொழிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் தன்னல மற்று, தலையாயத் தொண்டாற் றும் புரட்சி கவிஞன் பாரதிதாசன் நீண்ட நாள் வாழ்ந்து வருதல் தமிழுக்கு நன்மை! வாழ்க புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

விமர்சனம்

விமர்சன மெழுவதென்பது விளையாட்டு வேலையல்ல! விமர்சனமெழுவதற்கு ஆழ்ந்த கலையறிவும், அனுபவ முதிர்ச்சியும் வேண்டும். தடியெடுத்தவனெல்லாம் தண்டல் காரனாக முடியாததுபோல, இலக்கியங்களைப் படித்த எல்லோராலும் இலக்கிய விமர்சனம் செய்ய முடியாது. இலக்கியச் சுவையறியும் திறமைஉலகில் சிலருக்குத்தான் உண்டு. ரசிகத் தன்மையுள்ளவர்களிலேகூட, தாம்அறிந்தவைகளைப் பற்றி அபிப்பிராயம் கூறும் திறமையுடையவர்கள் வெகு வெகுக் குறைவு! இந்த மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ள விமர்சகர்களால் தான் இலக்கியம் ஆக்கமடைகிறது. இலக்கிய ஆக்கத்தின் கர்த்தாக்களான விமர்சகர்களின் வேலையை மேற்கொள்ளுபவர்களுக்கு, ஆழ்ந்த கலையறிவும், அனுபவமும் தேவையென்று ரசிகர்கள் விரும்புவது இதனால் தான்!

மேலே குறிப்பிட்ட தகுதியற்றவர்கள் இலக்கிய விமர்சனம் எழுதப் புகுந்தால், அவர் தம் முயற்சியினால் இலக்கிய வளர்ச்சி தடைபடுமேயன்றி, வளர்ச்சியடையாது. அனுபவமும், கலையறிவு மற்ற இலக்கிய விமர்சகனால் இலக்கிய வளர்ச்சி தடைபடுவது மட்டுமல்ல; இனிய இலக்கியங்களைத் தீட்டி உலகிற்களிக்கும ஆசிரியர்களது வாழ்விற்கே உலைவைப்பதாகும். இலக்கிய விமர்சகனென்று தம்மை உலகம் அழைக்க வேண்டுமென விரும்பும், தனிப்பட்ட எவரின் மீதுள்ள அழுக்காறினால் கூறுவதல்ல இது! வளர்பிறை போன்று வளர்ந்து வரும் கலை நலம் கருதி கூறுவதாகும்.

ஆங்கில இலக்கியத்தின் அழகுக் கவிஞரென அழைக் கப்படும் அறிஞர் கீட்ஸ் 'சூரியாஸ் தமனம்' (Endy Mion) என்ற தலைப்பில் அருமையான கவிதையொன்று தீட்டினர் கவிஞர் கீட்சின் இந்தஇனிய கவிதைக்கு அநாம தேயப் பேர்வழியொருவன் விமர்சனம் வரைந்தான். இந்த அனுமதேயத்தின் விமர்சனமும் Quarterly Review. என்ற ஆங்கில நாட்டு சஞ்சிகையில் வெளி வந்து விட்டது. இந்த அபத்த விமர்சனத்தை பார்த்த உடன், சூரியாஸ்த மனத்தை தீட்டிய கவிஞர் கீடசின் அருமையான வாழ்க்கை வாலிப பருவத்திலேயே அஸ்தமனமடைந்தது. இந்த சோகச் சரித்திரத்தை ஆங்கில நாட்டு ஆவேசக் கவிஞரான பைரன், தமது "டான் ஜுவானில்" தீட்டியுள்ளான்! மனமுடைந்து மாண்ட அறிஞர் கீட்சின் அநியாயச் சாவி லிருந்தோர் உண்மையை உலகம் உணர வேண்டுகிறுர். அறி ஞர் கீட்ஸின் அநியாயச் சாவு ஆங்கில இலக்கிய உலகத் திற்கு மட்டு மல்ல, உலகத்தற்கே ஓர் உண்மையை உணர்த்துகிறது! கவிஞர் கீட்ஸ் காலமான கதை தந்த உண்மையின், பிரதிபலிப்பே மேலே குறிப்பிட்ட கருத்து!

புரட்சிக் கவிஞர் பாரதிதாஸன் பாடல்களிலே, மொழி, நாடு, நாட்டு மக்களின் நலனை காட்சியளிக்கும். கண்ணுக்கும், அறிவிற்கும் அப்பாற்பட்ட கீழ்லோக, மேல்லோக வாழ்வின் வர்ணனைகளை மருந்திற்கும் காண முடியாது! காலம் மாற மாற, மனிதன் மன நிலையும் மாறத் தானே செய்யும். மனதிலேற்பட்ட மாறுதல், வாழ்க்கை யில் எதிரொலிக்காமலாயிருக்கும்? மாறும் காலத்தில் மாறும் வாழ்வு படைத்த மனித உள்ளத்தின் முழக்கமே பாரதி தாஸன் பாடல்கள்! பழமையிலே மூழ்கிக் கிடக்கும்

சமூகத்திற்கு, புதுமையுணர்ச்சியை ஊட்டும் புரட்சிப்பாடல்கள்! மனித உரிமையின் முறையீடு—இல்லை. இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் புது உலகத்தின் சாரசட்ட மெனலாம்! புரட்சிக்கவிஞர் பாடல்களிலே வருண வேறுபாடுகளும், மதமாச்சரியங்களும் பார்க்கத் தேடினாலும், தேவைப்படுவனவாகவே தென்படும். இவருடைய கருத்துக்களிலும், கற்பனைகளிலும் காலத்தை தழுவிய புதுமைக் கருத்துக்கள் பிரதிபலிக்கும்! பைரனது பாடலிலேயும், டாண்டியருடைய பாடலிலேயுமுள்ள தேசிய ஆவேசமும், ஷெல்லி விட்டியர் போன்றவர்களின் கவிதைகளிலே காணும் அபேதவாத கருத்துக்களும், வாட்ஸ்வொர்த், கீட்ஸ் போன்றவர்களின் கவிதைகளிலே காணும் இயற்கையின் அழகுக்காட்சிகளை, இவருடைய கவிதைகளிலே காண முடியும்! தன் கருத்துக்களை கவிதையாக புனைந்து கொடுப்பினும், பாரதிதாஸனது பாடலிலே கவிதையின் கம்பீரம் குறைந்து விடவில்லை! இவருடைய கவிதைகளெல்லாவற்றிலும், இலட்சிய ஆவேசம் துள்ளித் துடிக்கிறது! இனி இந்த அரிய அமைப்பை அடிப்படையாக அமைத்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புனைந்த பாடல்களை பார்ப்போம்.

உலகில் உற்பத்தியாகும் ஊசியிலிருந்து உயர்ந்த பொருள்களை யெல்லாம் உற்பத்தி செய்த உழைப்பாளி குடிக்க கூழுக்கும் வழியற்று கண்ணீர் விட்டு வாழ்கின்ற கோரமான காட்சியை, பாரதி தாஸன் பாடலிலே படம் பிடித்துக் காட்டுவதைப் பாருங்கள் :—

காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத் தகுந்தது வறுமையாம்—அவன்
பூணத்தகுந்தும பொறுமையாம் !

பாடு படும் பாட்டாளிக் கூட்டம் பட்டினிச் சிறையில் புழுவெனத்துடிக்கும் காட்சியைக்கண்டு குமுறும் கவிஞரின் மனதை கண்டு விட்டீர்களல்லவா? உழைத்து உரு மாறிய உழைப்பாளர் கூட்டத்தின் வாழ்வு உயர, உலகை நோக்கி இதையெடுத்து கவிஞர் கேட்கும் கேள்வியை சற்று செவி கொடுத்துக் கேளுங்கள்!

“ கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ ?—புவி
வாழ்வது தான் எந்தத் தேதியோ ?”

கவிஞரின் இந்தக் கேள்வி எப்படி? இன்னலிலே இன்பங்காணும்இரும்பிதயம் படைத்த அரக்கர் கூட்டத்திற்கு, நல்ல அடியென்று, கைகொட்டி ஆரவாரம் செய்வீர்களல்லவா? இந்த வஞ்சகக்குள்ளநரிகளுக்கு மட்டுமல்ல, வறுமையிலே வாடி வதங்குவோரின் சிந்தனைக்கும் நல்ல தூண்டுகோல்! வஞ்சகர் தம் தளையிலிருந்து வையம்தப்பி உய்யும் நாளெதுவென்று கேட்டுவிட்டு, கவிஞர் இதோடு அவர்களை விட்டுவிடவில்லை! சமுதாயத்தில் பொருளாதாரத்திலே வலிமைபெற்றவர்களை சாந்தமாக இரண்டு கேள்விகள் கேட்கிறார். கவிஞரின் இந்த கேள்விகள் இரண்டும் மிகவும் கவனத்திற்குரியது. இதுதான் அது!

மக்களெல்லாம் சமமாக அடைந்திட
மாநிலம் தந்ததில் வஞ்சமோ?—பசி
மிக் கவரின் தொகை கொஞ்சமோ ?”

கவிஞரின் இந்த கவிதையை கேட்கும் மனிதனின் இதயம் மனித இதயமாக இருப்பின், இயற்கையாக மனித உள்ளத்திற்குரிய, உணரும் சக்தியால் உண்மையை

உணருவான்! உணர்ந்து உண்மையின் பாதையில் நடக்க முயலுவான். உலகத்தின் சூழ்நிலைக்கேற்ப, தமது வாழ்வின் வழியை வகுத்துக்கொள்ள மறுக்கும் உலுத்தர் கூட்டத்தால் உபத்திரவமிருந்தால், அடுத்துச் செய்வது என்ன என்கின்றீர்களா? அந்த அதர்மர்களை நோக்கி கவிஞர் கூறுவது இதுதான்!

"வலியோர் சிலர் எளியோர் தமை
வதையெ புரிகுவதா?
மகராசர்கள் உல காளுதல்
நிலையாம் எனும் நினைவா?"

ஊரார் உழைப்பிலே உண்டு வாழும் இலட்சுமி புத்திரர்களைப் பார்த்து புரட்சிக் கவிஞர் கேட்கும் கேள்வி எப்படி? வையத்திலே வேந்தர்களது ஆட்சி அசையாத மலைபோல நிலைத்து நிற்கும் நினைப்பிலா என்று, வலியோரைப் பார்த்து கவிஞர் கேட்கும்போது, கவிஞருக்கு ஒப்பந்தர கைகொட்டி ஆரவாரிக்காதவர் யார்? நாட்டையாண்ட மன்னர்கள் நாளடைவில், அதிகார பீடத்திலிருந்து சரிந்து விழும் சம்பவத்தை சுட்டிக் காட்டுகிறார். இதே நேரத்தில் கொடுமை யென்னும் கூண்டிலே அடைபட்டு, அவதிப்படும் மக்களை ஆக்க வேலைக்கழைக்கிறார். மின்னல் வேகத்திலே கவிஞர் தந்த அந்த இனிய அழைப்பு இதோ!

"உலகாள உனது தாய் மிக
உயிர்வாதை யடைகிறாள்;
உதவா தினி ஒரு தாமதம்
உடனே விழி தமி ழா!"

உண்மையை உணர்ந்து உரிமை கேட்டும் உரிமை நல்க மறுக்கும், நயவஞ்சகக் கூட்டத்தின் இரும்புப் பிடியி

விருந்து விலக விழிப்படை! விழிப்படைந்ததும் அடுத்து என்ன என்பது தானே, உங்கள் சிந்தனையிலே சுழலும் எண்ணம்? அதற்கு கவிஞர் கூறும் இன்மொழியினையும் பாருங்கள்;—

"கலையே வளர்! தொழில் மேவிடு!
கவிதை புனை தமிழா!
கடலே நிகர் படை சேர்கடு
விடநேர் கருவிகள் சேர்!
நிலமே உழு! நவதானிய
நிறை யூதியும் அடைவாய்;
நிதி நூல்விளை! உயிர் நூல் உரை
நிசநூல் மிக வரைவாய்!
அலைமா கடல் நிலம் வானிலுன்
அணி மாளிகை ரதமே
அவை ஏறிடும் விதமேயுன
ததிகாரம் நிறுவுவாய்!"

புயல் வேகமா? இல்லை மின்னல் வேகமா? என ஐயுறும் ஆவேசமுடன் கூடிய, கவிஞரின் இந்த கவிதை காட்டும் பாதை, அவல நிலையிலுள்ள தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் தேவையில்லையென இயம்புவோர் யார்? வாழ்விலே சூழ்ந்துள்ள வேதனை விலக விரும்பி தொழிலும், கலையும் வளர்த்து, தன்னரசு காண முயலும் முயற்சிக்கு முட்டுக் கட்டை கொடியவர்கள் குழுவிலிருந்து வந்தாலும் தயங்காதே. கொடியவர் செயலை அழிக்க கவிஞர் காட்டும் பாதையைப் பாருங்கள்:—

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!"

கொடுங்கோலர்களின் வஞ்சகச்செயலை வீழ்த்த வாளை யெடுக்கச் சொல்லுகிறார் கவிஞர். வாளையெடுக்கச் சொல்லி விட்டு, அத்தோடு கவிஞர் இந்த கவிதைக்கு முத்தாய்ப்பு வைக்கவில்லை! "குகை வாழ் ஒரு புலியே உயர் குணமே விய தமிழா!" என்ற இந்த அடியில், புலியென போர் புரியும் பண்பு படைத்த பழந்தமிழ் மக்களின், பாரம்பரியத்தில் வந்தவனே யென்று, பாரம்பரிய பண்பாட்டை சுட்டிக் காட்டுகிறார். இந்த கவிதையிலே வீரம் மட்டுமல்ல, இளமை மாறாத தாய் இவ்வுலகில் விளங்கும், நமது நாகரிகத்தை பிரதி பலிக்கச் செய்கிறாரென்று சொல்லவும் வேண்டுமோ? கவிஞர்கள் சில்லெழுத்தில் பல பொருளை செதுக்கும் சிற்பிகளன்றோ? அத்தகைய அமரர்களின் வழி வந்த இவரிடம், இத்தன்மை இருப்பதில் ஆச்சரியத்திற்கிடமேது? இந்த கவிதை பூராவும் ஒரே உணர்ச்சி மயம். இப்படிப்பட்ட உணர்ச்சியூட்டும் பாடல்களை, பெரும்பாலும் பைரனுடைய பாடல்களிலேதான் பார்க்க முடியும்!

தொழிலாளியின் தோழன்!

அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா? ஆம். இது போலவே பாரதி தாசனது பாடல்கள் மூலம் பாரதி தாசனை யாரென்று புரிந்து கொள்ளலாம். இயற்கை காட்சிகளின் அழகின் சிரிப்பை கவிதையாகப் புனையும் போதும், காதல் கவிதையெழுத வந்த நேரத்திலும், பாடு பட்டும் பலனின்றி பஞ்சையாய் வாழும், பாட்டாளித் தோழனின் வாழ்வைச் சித்தரித்து, இணைத்துக் காட்டுவார். இந்தச் சித்தரிப்பு, இவரது இதயப் பாங்கை தெற்றென யெடுத்துக் காட்டும் தன்மையதாயுளது! தொழிலாளியிடம் தோழமை பூண்டுள்ள தன்மையில், அவனது வாழ்வை விளக்கிக் கூறுவதைப் பாருங்கள்!

உன்னைக் காணும் போதினிலே என்னுள்ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்
கனத் திருந்த வெண் சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக்காணும் இன்பம்தானே!

கன்னியொருத்தியை காளை யொருவன் கண்டவுடன், அவளைப் பற்றி அவன் கூறுவதாக கவிஞர் குறிப்பிடுவது தான் இந்தச் கவிதைத் துணுக்கு! கவிஞரின் இந்த கவிதை பகுதி படித்து, ரசித்து, சிந்திக்க வேண்டிய பகுதியாகும், வறுமையில் வாடி வதங்கும் தொழிலாளியின் வாழ்க்கையை, இதை விட அழகாக எங்கே எவர் கவிதையிலே காட்டியுள்ளார்?

|

உரிமையை உணர்ந்து உழைப்பாளர் எழுச்சியுற்றால், எழுச்சியுற்ற உழைப்பாளர் தம்மை ஆளுவோர் அதிகார வலிமையால் அடக்குவாரன்றோ? எழுச்சியுள்ள மக்களின் கிளர்ச்சியை அடக்கு முறையால் அடக்க இயலுமா? முடியாதன்றோ! இந்த கருத்தை நயம்பட இயம்புகிறார் கவிஞர்! கன்னி யொருத்தியின் காதலிக்கு பலியான காளை யொருவன்: அவள் காதல் கோரிக்கைக்கு ஒப்பந்தரும் போழ்து, தங்களிருவரையும் நெடுநாள் பிரித்து வைத்த அரசர், அமைச்சரின் சூழ்ச்சி வெளிப்பட்டதை, நினைத்து, நெஞ்சு மகிழ்ந்து தலைவன் கூறுவதாக, நல்ல வீணையின் நாதத்தின் ஒலி போல கவிஞர் நவில்வதைக் கேளுங்கள்!

"காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?
நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையிற் போட்டால்
நிறை தொழிலாளர்களுணர்வு மறைந்து போமோ?

கதிரவனை காரிருளைக் கொண்டும், செந்தாமரை மலரின் வாசத்தை சேற்றின் நாற்றத்தைக் கொண்டும், உண்மையை வாபடியும், கையடியும் கொண்டும், செந்தமிழை சூழ்ச்சியாலும், உணர்ச்சியால் எழுச்சியற்ற தொழிலாளிகளை சிறையிலே தள்ளியும், மறைக்கவும், அழிக்கவும், அடக்கவும் முடியுமாவென கவிஞர் கேட்கும் இந்தக் கேள்வியை மறுப்போர் யார்?

சிந்தனைக்கு!

எண்ணத்திலே புரட்சி யுணர்ச்சி மலர்ந்தால் தான் செயலிலே புரட்சி காண இயலும்! புதுமையல்ல இது! சரித்திரம் சொல்லுமுண்மை! பதினைந்தாண்டுகளிலிருந்து இருதாண்டுகளுக்கொரு முறை, மேலைய நாடுகளிலே ஆட்சி முறை மாறுவதற்குக் காரணம் அந்த நாட்டு மக்களின் பண்பட்ட வாழ்க்கையமைப்புதான்! நாட்டின் சொந்தக்காரர்கள், தாங்கள் தானென நெஞ்சார நினைக்கிறார்கள் மக்கள் அங்கே! இங்கோ மக்கள், அதிகார பீடத்திற்கும் தமக்கும் வட துருவத்திற்கும், தென் துருவத்திற்கு முள்ள சம்பந்தமென நினைத்து, ஆட்சியைப் பற்றி கவலையற்று இருக்கின்றனர். கவலைப்பட்டு மக்கள் தம் கடனாற்ற நினைந்திருந்தால், இந்தியா தன்னாட்சியடைந்து தலை நிமிர்ந்து நின்ற ஆண்டுகள் பலவாக ஆகியிருக்கும்! ஆனால் இன்றைய தினம் நமது பொன்னாட்டின் நிலை———? இலட்சிய வாதிகளின் இதயம் இன்னலிலே மூழ்கிக் கிடக்கும் இந்நேரத்தில் தான், மக்களின் சிந்தனையைத் தூண்டும் சிறந்த கவிதைகளை புரட்சிக் கவிஞர் புனைந்தார்! புரட்சிக் கவிஞர் புனைந்த "புரட்சிக்கவி" யென்ற நீண்ட கவிதையிலே மிளிரும், புத்துலகக் கருத்துக்களை போற்றுதார் எதையும் போற்றார். இனிமையான சொல்லோவிய மிது! உணர்ச்சியுள்ள அந்த சொல்லோவியத்தில், படிப்போர் இதயத்தை புத்துணர்ச்சி பெறச் செய்யும் பகுதியைப் பாருங்கள் :—

பேரன்பு கொண்டவரே பெரியோரே, என்
பெற்ற தாய்மாரே, நல் இளஞ்சிங்கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க, நெடுமரங்கள்

நிறைந்து பெரும் காடாக்கப்; பெரு விலங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங் குன்றிற் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ் நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண்டாக்கி!
சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள் களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்து தந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு?
அக்கால உலகிருட்டைத் தலை கீழாக்கி
அழகிய தாய் வசதியதாயச் செய்து தந்தார்!
இக்கால நால் வருணம் அன்றிருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றிப்
புக்கபயன் உண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும் சேற்றினுக்கும்
கச்கும் விஷப்பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும்பசிக்கும் இடையறு நோய்களுக்கும்,
பலியாகிக் கால் கைகள் உடல்கள் சிந்தும்
பச்சை ரத்தம் பறி மாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்
தந்தவெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலி வேஷம் போடுகின்றான்! பொது மக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?

என்ற அடிகளைப் படித்த உடன், பல ஆண்டுகளுக்கு முன் நான் படித்த பிரபல ரஷ்யப் புரட்சித் தலைவரும், எழுத்தாளருமான கிருபாட்கின் எழுதிய இளைஞர்களுக்கு

விடுத்த வேண்டுகோள்' என்ற புத்தகத்தின் நினைவு வந்தது! நினைவிற்கு வந்த கிருபாட்கின் புத்தகத்தில் நான் படித்தவைகளை என் மனக்கண்முன் கொண்டுவந்து பாரதிதாசன் அவர்களது இந்த கவிதைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். கிருபாட்கின் புத்தகத்தின் விளக்கத்தைவிட பன்மடங்கு பாரதிதாசன் பாடல்லி காணும் கருத்துக்கள், சிறக்கக் கண்டேன். வெறும் புகழ்ச்சியல்ல! உண்மை இது. காடு கழனியாகவும், கழனி நகரமாகவும், நகரம் காடாகவும் உருவான விதத்தை உருக்கமாக கவிஞர் கூறும் இந்த கவிதை கலா ரசிகர்களுக்கல்ல, வேதனையை வாழ்க்கையிலே மேற்கொண்டுள்ள வாலிப உலகத்தின் சிந்தனைக்கேயாகும்!

புரட்சிக் கவிஞரின் புதிய குடும்பம்!

நீலநிறக் கடலில் நிலமதி நீந்தி விளையாடும் நேரத்தில் ஓர் இரவு! கண்ணடிக் கன்னத்தைக் காட்டி உள்ளத்தைப் புண்ணாக்கிப்போடும், தமிழ் மகளொருத்தி தன் கணவன் படுத்திருக்கும் படுக்கையறை நோக்கி நடந்தாள்! தன் கணவன் படுக்கையிலே படுத்திருப்பதைப் பார்த்த அவள், அவன் அருகே வந்தமர்ந்தாள், தலைவி வந்ததை தான் தெரிந்து கொண்டதாக தலைவன், சிறு கனைப்பின் மூலம் தலைவிக்குத் தெரிவித்தான். இந்த கனைப்பைக் கேட்ட அந்த அணங்கு அடுத்து "அத்தான்" என்றாள். குயிலின் இனிய மொழியை யொத்த இவளின் "அத்தானென்ற" இன்னொலியைக் கேட்ட தலைவன் உடனே "உட்கார்" என உரைத்தான்!

உட்கார்ந்த அந்த வஞ்சி தன்னருகே யிருந்த சந்தனப் பேழையிலிருந்து சந்தனத்தை யெடுத்து, தலைவனின்

தோளிற்கும் மார்பிற்கும் பூசினாள். தன் இதயத்தை காதற் கடலிலே மிதக்க விட்ட காதலனும், தன் அருகே யிருந்த முல்லை மலரை யெடுத்து தன் காதலியின் கூந்தலில் சூட்டினான். இருவரும் இன்ப உலகில் இருக்கும் இந் நேரத்தில் தலைவியின் சிந்தனையி லெழுந்ததோர் எண்ணம்! தனது உள்ளக் கிடக்கையை தலைவனிடம் கூற விரும்பி தலைவனின் சம்மதம் கேட்டாள். இவளுடைய இனிமை யான பேச்சில் நல்ல கருத்திருக்குமென நினைத்து அவனும் ஒப்பம் தந்தான். தலைவனின் ஒப்பம் பெற்ற அந்த ஏந் திழையாள் ஏறுபோல் கர்ஜனை செய்ய ஆரம்பித்து விட் டாள். அவளின் கர்ஜனையைக் கவனியுங்கள் !

"அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்,
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்
இது வரைக்கும் பொது நலத்துக் கென்ன செய்தோம்?
என்பதை நாம் நினைத்துப் பார்ப்பது மில்லை.
இன்றைக்கு கறியென்ன ? செலவு யாது ?
ஏகாலி வந்தானா? வேலைக்காரி சென்றாளா? கொழுக்
கட்டை செய்யலாமா ?
செந்தாழை வாங்குவமா? கடைச் சரக்கை
ஒன்றுக்கு மூன்றாக விற்பதெந்நாள் ?
உன் மீதில் எனக்காசை பொய்யா ? மாடு
குன்று நிகர் குட நிறையக் கறப்ப துண்டா ?
கொடுக்க லென்ன ? வாங்கலென்ன ? இவை தாம்
—கண்டோம்!"

பொது நலத்திற்கு பாடு படாமல் தன்னலத்திலேயே தனது தலைவன் கவனஞ் செலுத்துவதாக அங்கலாய்க்கும் இந்த அணங்கின் வீரமுழக்கம் முற்றுப்பெறவில்லை ! இன் னும் இருக்கிறது, தொடர்ந்து படியுங்கள்:—

தமிழரென்று சொல்லிக் கொள்ளுகின்றோம் நாமும் ;
தமிழ் நாட்டின் முன்னேற்றம் விரும்புகின்றோம்,
எமதென்று சொல்லுகின்றோம் நாட்டோறுந்தான்

எப்போது தமிழனுக்குக் கையாலான
நமதுழைப்பை, ஒரு காசை செலவு செய்தோம்;
சாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்
அமைவாகக் குந்தி நினைத்தோமா இல்லை.
அனைவருமிவ்வாறிருந்தால் எது நடக்கும் ?''

என்று ஆத்திரத்தோடு இந்த அணங்கு தன் தலைவனை கேட்கிறாள். மங்காத தமிழ் இந்த மங்கையின் மூச்சிலும் பேச்சிலும் மிளிர்கிறது! அவள் வாழ்வே தமிழ்! தமிழ் மீது இவளுக்கிருக்கும் காதல், இவள் தன் தலைவனிடம் கூட வைத்திருக்க மாட்டாள் போலும்! இனி இந்த ஏந்திழையாளின் உரை கேட்ட தலைவன் தந்த உரையையும் படியுங்கள்

"இந்த பழம் புகழ் மீள வேண்டும் நாட்டில்;
எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்
வழித் தொழுகும் சுவைத் தமிழே பெருக வேண்டும்.
விழுந்த தமிழ் நாடு தலை தூக்க என்றன்
உயிர் தனையே வேண்டினும் தருவேன் !'' என்றாள்.

தலைவனின் இந்த உரை கேட்டு உவகை யடைந்த உள்ளத்தினளாகிய அந்த வஞ்சி தன் கணவனொரு கர்ம வீரனென நினைத்து

"பழம் இடுவேன் ! சர்க்கரை பால் வார்ப்பேன் ! உங்கள்
பண்பாடும் வாய் திறப்பீர் அத்தான் !''

என்று ஆனந்த பண் பாடினாள். அத்தகைய லட்சியம் நிறைந்த உரையாடல்களைக் கொண்ட குடும்ப மொன்றை புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கவிதையாக புனைந்து தந்துள்ளார். அது குடும்ப விளக்காக மலர்ந்துள்ளது! கவிஞரின் குடும்ப விளக்கு இரண்டும் இன்றைய தமிழர் இல்லங்களிலே இருக்க வேண்டுவது அவசியம்! கல்வி யில்லாத வீட்டை இருண்ட வீடாகக் கொண்டு இவர் வரைந்துள்ள "இருண்ட வீடெ'ன்னும் கற்பனைச் சித்திரம், தமிழிலக்கியத்திற்கோர் புதுமையாகும்!

புலவர் காட்டும் பாதை:-

கலையிலும், இலக்கியத்திலும், தத்துவங்களிலும் புது மைக் கருத்துக்கள் தோன்றும் பொற்காலமிது! அறிவு காட்டும் பாதையிலே நடக்க மனிதன் விரும்பும் காலம். இந்த காலத்தில் பிறக்கும் கவிதையும் இலக்கியமும் இந்த காலத்தை ஒட்டி யிருப்பதுதான் இயற்கையின் விதியுமா கும்! காலத்தை ஒட்டி கவிதை தீட்டுபவனையே நாடும், உலகமும் வரவேற்கும். அடிமை நாட்டிலே வாழும் அடிமை யொருவன் புனையும் கவிதை யெதுவாக இருக்க முடியும்? அவல நிலை யடைந்துள்ள மக்களின் இன்றைய நிலையும் அதற்கு முன் அவர்கள் வாழ்ந்த வாழ்வின் சிறப்பை யெடுத்துக் காட்டுவதாகத்தானே யிருக்கும்! ஆம், இப்படித்தானிருக்கும்.

கலைகளின் கூட்டமே தேசத்தின் ஜீவன்! இந்த ஜீவனை நிர்மாணிக்கும் சிற்பிகள் கலைஞர்களே! நாட்டின் விதியை நிர்மாணிக்கும் மார்க்கத்தை மக்களுக்குக் காட்டு பவர்களும் கலைஞர்களே! இந்த விதியில் மலர்ந்துள்ள கவி தைகளை கவிஞரின் கவிதைகளிலே காணமுடியும். அடிமை மக்களின் சிந்தனையை தூண்டு முறையில் கதை ரூபத்தில் கவிஞர் புனைந்துள்ள கவிதையைக் காணுவோம்:—

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே வாழ்ந்துவரும் தம்பதி களிருவர், மலைமேலுள்ள மூலிகைகள் இரண்டைப் பற்றி பெருமை பட பேசிக் கொள்ளுகின்றனர். மூலிகையைப் பறித்துத் தர வேண்டுகிறாள் தலைவி! மூலிகைகளைப் பறிக்கப் போனால் பலஇடையூறுகள் வருமென்று கூறி மறுக்கிறான் தலைவன். தலைவி மூலிகையை பறித்துத் தாவில்லை யென்றால் "உயிர் துறப்பேன்" என்று பய முறுத்தினாள். உடனே அவன் "என்னடி! பெண்ணே நான் எவ்வளவு சொன் னாலும், சொன்னபடி கேட்காமல் தோஷம் விளைக்கின்றாய், பெண்ணுக்கிது தகுமோ? வண்ணமலர்ச் சோலையிலே, எண்ணம் வேறாகி இருக்கின்றேன் நான்" என்று கண்ணே

அவள் கண்ணீரிட்டுக் கைகேபந்தி நின்றிட்டான். இதைக் கேட்ட அந்த வஞ்சி அடுத்துரைப்பது கேளுங்கள்:—

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ!
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தைப்?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.
ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலை தான் ஆடவர்க்கும் உண்டு.
புலன் அற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால் அந்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அமமட்டே.
சித்ர நிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரத நற்
புத்ரர்களைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது?''

நாட்டின் நிலைமை கதாபாத்திரத்தின் மூலம் கவிஞர் சித்தரிக்கும் அழகை ரசிப்பதை விட நாட்டிறங்கிந்த நங்கையின் வாதம் இன்றைக்குத் தேவையா? இல்லையா வென்று சிந்தியுங்கள்!

காதலர்களிருவரும் மலை மேலேறி, மூலிகையைக் கண்டு அதனைக் கிள்ளி சாரலுக்குத் திரும்புகின்றனர்! வரும் வழியில் பிரயாண அசதி நீங்க அமர்கின்றனர். அமர்ந்த இவர்கள் பறித்த மூலிகையிலொன்றைத் தின்றவுடன் உலகில் பேசுவதெல்லாம் கேட்கிறது.

முதலில் இத்தாலிய நாட்டைச் சார்ந்த ஒருவனுக்கு, பேதமற்ற வாழ்வுபற்றி பிரஞ்சுநாட்டுக் காரனொருவன் போதிக்கிறான். இறுதியாக ஆங்கிலேயனொருவனும் பேசுகிறான்:—

'ஓ! என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நம்மை விட்டுப் போகாது
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்!
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்;
ஆகையால் எல்லோரும் அங்கே தனித்தனிதான்.

ஏகமனதாகி அவர் நம்மை எதிர்ப்பதெங்கே ?
பேதம் வளர்க்கப் பெரும் புராணங்கள்.
சாதிச் சண்டை வளர்க்கத்தக்க இதி காசங்கள் !
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாழுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றோர்.
தேன் சுரக்கப் பேசி இந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான் சுரை விட்டு வந்த பூசுரும் வாழ்கின்றார்.
இந்த உளைச் சேற்றை, எறாத ஆழத்தை
எந்த விதம் நீங்கி நமை எதிர்ப்பார்? இன்னமும்,
சிந்தனை சக்தி சிறிது மின்றி மக்களுக்குத்
தம் தோள் உழைப்பிலே நம்பிக்கை தானு மின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லாதொழித்து விட்டுச்
சாறற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்ற வைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கியே அந்தக்
கற்கள் கடவுள்களாய் காணப்படும் அங்கே.
இந்த நிலையிற் சுதந்திரப் போரெங்கே ?
கொந்தளிப்பில்நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே?
'தேகம் அழிந்து விடும்; சுற்றத் தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம்மற்றவிதம்
பாழுலகம் பொய்யே பரமபதம்போ' என்னும்
தாழ்வசற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.
சாதிப்பிரிவும் சமயப்பிரிவுகளும்,
நீதிப்பிழைகள் நியமப்பிழைகளும்,
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே
ஓடச் செய்தால் நமையும் ஓடச் செய்வார் என்பேன்''

வெள்ளையனொருவன் நம்முடைய சமூகத்தைப் பற்றிச் சொல்வதாக கவிஞர் கூறியுள்ள மேலே காட்டிய கருத்து, நாட்டின் நலன் பற்றி நினைத்து, பொதுப் பணி புரிவோரின் கவனத்திற்குரியதாகும். வையவல்லரசுகளில், வல்லரசாக வாழ்ந்து வந்த நமது சமூகம் தாழ்வுற்றமைக்கு, கவிஞர் காட்டும் காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியது வாசி பர்களின் இன்றியமையாக் கடனாகும்.

மத மாச்சரியத்தினால் மனிதன் தன்னை மனித பண்பாட்டிலிருந்து தானாகவே மாற்றிக்கொண்டு, கையில் கொடுவாளைத் தாங்கி, கசாப்புக்கடைக் காரன் போல் காட்சியளிக்கின்றானே, அவனைப் பார்த்து கவிஞர் கூறுவதென்ன ?

"மத ஓடத்திலேறிய மாந்தர்களே !—பலி
பீடத்திலே சாய்ந்திரே !"

என்கிறார். மதம் மனித வாழ்வின் பலி பீடமெனக் கூறுவதை, மதத்தின் பெயரால் ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்விற்கு உலைவைக்கும் மதோன்மத்தர்களின் கொடிய செயலைக் கண்டும், மறுப்போர் யார்? மதமாச்சரியத்தை மனதிலிருந்தகற்றி மனிதரெல்லாம் ஒன்றெனக் கொள்ள கவிஞர் கூறுவது இது தான் !

"அறிவை விரிவு செய் ! அகண்டமாக்கு !
விசாலப்பார்வையால் விழுங்கு மக்களை !
அணைந்து கொள் ! உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு !"

இதற்குப்பின் அடுத்த முழக்கம் என்ன என்பது தானே ! அன்பான பணிக்கு அடுத்து அழைக்கிறார். இது தான் அந்த அழைப்பு!

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.
பொது உடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனித மோடதை எங்கள் உயிரென்று காப்போம்.
இதயமெலாம் அன்புநதியினில் நனைப்போம்.
'இது எனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்;
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒரு பொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம் !
இயல் பொருள் பயன் தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்"

சண்டையும், சச்சரவு மற்ற சாந்தியமான வாழ்வு கான புது உலகம் சமைக்க வேண்டுகிறார். வாழ்வெனில் அது எல்லோருக்கு மிருக்க வேண்டு மென்று, உறுதி படக் கூறுகிறார் புரட்சிக் கவிஞர். கவிஞரின் பெரு நோக்கம் தானென்னே !

இயற்கையும் காதலும் !

கவிஞரின் கவிதை எங்குமே இயற்கையின் அழகைக் காண முடியும், குறிப்பாக கவிஞரின் அழகின் சிரிப்பு பூராவிலும் இயற்கை வாணனைகளைக் காணலாம்! World is my school, the nature is my study என்று தாகூர் சொன்னதைச் சொல்லாமல், சுட்டிக் காட்டும் சொல்லோவியங்கள் பலவற்றை புரட்சிக்கவிஞரின் பாட லிலே பார்க்கலாம். தடாகத்திலே மலர்ந்துள்ள தாமரை. செழித்து வளர்ந்துள்ள சோலையிலே மலர்ந்துள்ளமலர். கூவிடும் குயில், இரையுண்ணும் புறா, கிளைக்குக் கிளை தாவும் கிளி, மேகத்தின் வரவு கண்டு ஆனந்தத்தால் ஆடும் மயில், நீல நிறக் கடலில் நின்று விளையாடும் நிலமதி, இவையனைத் தையும் பாரதிதாசனது பாடலிலே பாாக்க முடியும்! இதை பிற புலவர்களுடைய பாடலிலேயும் பார்க்கலாம், ஆனல் அவர்களுடைய பாடல்களிலே இவைகள் கையா ளப்பட்ட முறைக்கும் இவருடைய முறைக்கும், மலைக்கும், மடுவுக்குமுள்ள மாறுபாட்டை காணலாம்!

இரையுண்ணும் புறுவொன்றை புலவர் பாரதிதாஸன் பார்க்கிறார். பார்த்த உடன் அந்தக் காட்சியை கவிதையாக புனைந்த பாரதி தாசனுடைய பாடலிலே, புறுபெற்றுள்ள இடத்தைப் பாருங்கள்:—

“இட்டதோர் தாமரைப் பூ
இதழ் விரிந்திருத்தல் போலே
வட்டமாய்ப் புறுக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வீழ்வில்

வெட்டில்லை ; குத்துமில்லை ;
"வேறு வேறிருந் தருந்தும்
கட்டில்லை ; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கமில்லை !"

அழகான இயற்கையின் வர்ணனை, ஆனல் அதே நேரத்தில் சமூக பழக்கத்திற்குச் சரியான சாட்டையடி! கவிஞர் புறாக்களிடம் கண்டது இன்னும் என்ன என்னவென்று பாப்போம். ஒத்துவாழ்வதையே பிறவிக் குணமாகக் கொண்டுள்ள புறாக்களிலே கூட சில, சில சமயங்களில் பிரிந்து வாழக் காண்கிறார். புறாக்களிப்படி பிரிந்து வாழக்கற்றுகொண்டது, மனிதனிடத்திலிருந்து தானென ஒற்றுமையற்ற மனித வாழ்வை கிண்டல் செய்கிறார் கவிஞர்:....

"..........அன்பு
தவழ்கின்ற புறாக்கள தம்மில்
ஒருசில தறுதலைகள்
கவலைசேர் மக்களின்பால்
கற்றுக் கொண்டிருத்தல் கூடும்"

நாசூக்கான நையாண்டி! மனித வாழ்வைத் திருத்தும் புறாக் கூட்டத்திலே கூட, புல்லுருவிகளிருக்கக் காணும் புரட்சிக் கவிஞருக்கு மனிதனின் மேல் நினைப்பு வரக் காரணம், அவருக்கு மனிதசமுதாயத்தின் மேலிருக்கும் பாசம் தான்! கவிஞர் கண்ணோட்டத்தில் தலை சிறந்தவர் போலும்! இத்தோடு புறாவை விட்டு விட்டார், கவிஞரெனக கருதிவிடாதீர்கள் கூட்டிலே அடையப் போகும் புறாவைப் பார்க்கிறார் கவிஞர். உடனே கவிஞரின் நினைவிற்கு அடிமையாக வாழ்கின்ற மனிதனின் நினைவு வந்து விடுகிறது. அந்த நினைவிலே மலர்ந்த இந்த கவிதையைப் பார்த்து கவிஞரின் சுதந்திர ஆர்வத்தை அறிந்து கொள்ளலாம்.

"கூட்டமாய்ப்பறந்து போகும்,
சுழற்றிய கூர்வாள் போலே!

கூட்டினில் அடையும் வந்தே
கொத்தடிமைகள் போலே!
கூட்டினை வேலன் வந்து
சாத்தினான், குழைத்து வண்ணம்
தீட்டிய ஓவியத்தைத்
திரையிட்டு மறைத்தல் போலே!"

புறாவைப் பார்த்து புரட்சிக் கவிஞர் கண்டவைகளை நாமும் நேரில் கண்டனுபவித்தது போல், கவிதை மூலம் ரசித்தோம். இனி கிளியைப் பற்றி கவிஞர் புனைந்த கவிதைகளைப் பார்ப்போம்.

கிளியை தினந்தோறும் நாம் பார்க்கிறோம். நம்மிலே சிலர் அதைக் கூட்டிலே கூட பிடித்து அடைத்து வைத்திருக்கிறோம். இது நம்முடைய வாழ்க்கையிலே நிகழும் சாதாரணக் காட்சிதான்! நமது கவியரசர் கிளியொன்றைக் கண்டு அதனை, அன்பாயழைக்கும் காட்சியை கவிதையாகப் புனைந்துள்ளார்.

கவிஞர் கண்ட அந்தக் கிளி நம்முடைய நினைப்பை விட்டே அகலாது. அவ்வளவு அழகாக இலக்கிய உலகத்திலதற்கு இடமளித்துள்ளார். இலக்கிய உலகத்தில் பெரும் மதிப்பு பெற்ற அந்தக் கிளி இது தான்!

நீலவான் தன்னைச் சுற்றும்,
நெடிதான வானவில்லைப்
போலநின் கழுத்தில் ஓடும்
பொன்வரி மின்விரிக்கும்!
ஆல், அலரிக்கொழுந்தில்
அல்லியின் இலையில் உன்றன்
மேலுள சொக்குப் பச்சை
மேனிபோல் சிறிதுமில்லை!
கொள்ளாத பொருள் களோடும்,
அழகினிற் சிறிது கூட்டிக்
கொள்ளவே செயும் இயற்கை,

தான்கொண்ட கொள்கைமீறித்
தன்னரும் கையிருப்பாம்
அழகெனும் தலைச் சரக்கைக்
கிள்ளியமைத் திட்டகிள்ளாய்
கிட்டவா சும்மா வாநீ,"

கிளியைக் கண்ட கவிஞருடைய கலைகளுக்கு காட்சியளிக்கும் பொருள்களென்னயென்னவென்பதைக் கண்டீர்களா! அடே! அப்பா, சித்திரக்காரன் கூட வர்ணங்களைக் கூட்டி இவ்வளவு அழகாக சித்திரம் அமைக்க முடியாது. இயற்கை யழகின் எழிலை கிளியிடத்திலே கண்டு, கவிஞர் தீட்டிய இந்தக்கவிதையில், இயற்கையின் வர்ணனை வெகு ஜோரெனச் சொல்லுவார்கள் கலாரசிகர்கள்! இனி காதலை பார்ப்போம்.

சாதலும் வாழ்தலும் அற்ற இடம்—அணுச்
சஞ்சல மேனும் இல்லாத இடம்,
மோதலும் மேவலும் அற்றஇடம்—உளம்
மொய்த்தலும் நீங்கலும் அற்றஇடம்!"

இது தான் காதலுணர் வென்னும் லோகமென்று கூறுகிறார் கவிஞர். இந்தஉலகில் வாழ்வது மனிதஇயற்கை. இயற்கையான வாழ்வை நுகர்வதிற்கு கட்டில்லை! கட்டிலு மடங்காதது காதலென்று கூறுகிறார் கவிஞர். இந்தக் கருத்தை ஓர் பாட்டில் அழகு படக் கூறுகிறார்.

"காதல் அடைதவ் உயிரியற்கை !—அது
கட்டில் அகப்படும் தன்மையதோ ?"

இத்தகைய காதலுணர்வைக் கொண்ட காதலர்களை பிரித்து விட முனையும் மனித சமூகத்திடம், கவிஞர் முறையிடும் முறையீடு இது தான் !

"காதலர் களிருவரும்—தம்
கருத்தொரு மித்தபின்
வாதுகள் வம்புகள்என் ?—இதில்
மற்றவர்க்கென்ன உண்டு ?

இப்படிக் கூறியும் காதலர்கள் வாழ்வை தடை செய்ய மீண்டும் முயன்றால், அந்த பழையலோக அன்பர்களுக்கு கவிஞர் கூறுவது,

இன்று தொட்டுவியே—இரண்
டெண்ணம் ஒருமித்தபின்
நின்று தடைபுரிந்தால்—நீ
நிச்சயம் தோல்வி கொள்வாய்!''

என்ற இந்த மணிமொழிதான்! இப்படி அழகாக காதலைப்பற்றி, பாடல்கள்பல புனைந்துள்ளார். கவிஞர் தம்முடைய காதற்கவிதைகளில் சமுதாய ஒழுக்கத்திற்கு பங்கமில்லாமலே கவிதைகள் புனைந்திருக்கிறார். இவருடைய காதல் கவிதைகளை அண்ணன்படித்து தங்கையும், மகன் படித்துதாயும் கேட்டு ரசிக்கலாம்! காதல் கவிதைகளை படித்துரசிக்க விரும்புவோர், புரட்சிக்கவிஞரின் பாடல் களைப் படித்தாலேபோதும். ஷெல்லி, ஷேக்ஷ்பியர், பைரன் இவர்களை யெல்லாம் கூட அடுத்தார்போலவே தான்மதிப்பிடமுடியும். நமது கவிஞரென்பதற்காகவல்ல இந்தமதிப்பு. இந்தமதிப்பீட்டை அறியவிரும்புவோர் புரட்சிக்கவிஞரின் "எதிர்பாராத முத்தம், காதல்நினைவுகள்" என்ற ஏடுகளை படிக்கவேண்டும்.

கைம்மையைப் பற்றியும், பெண்களின் வாழ்க்கையைப் பற்றியும் பாரதிதாசன் பாடியுள்ள பாடல்களை பெண்கள் அவசியம் படிக்கவேண்டும். கவிஞர்கவிதை வாயிலாகக் கேட்கும் கேள்வி ஒவ்வொன்றையும், படித்த பெண்கள் பழமையிலே மூழ்கிக் கிடக்கும் தமிழர் சமுதாயத்திலே வாழ்ந்து வரும், ஒவ்வொரு தனி மனிதனையும் கேட்க வேண்டும் மகளிர்க்கு நீதி வழங்காத மனித உள்ளத்தை சுக்கல் சுக்கலாக வெடிக்கச்செய்யும், வெடி மருந்துகள் தான் பெண்கள் பற்றி இவர் பாடிய பாடல்கள். புதுப்புது உவமைகள் பலவற்றை, புரட்சிக் கவிஞர் இந்த பகுதிகளில் கையாண்டிருக்கிறார். இந்த இலக்கியங்களை ரசிக்க வேண்டியது இன்றியமையாததாகும்!

தமிழ் !

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது தமிழார்வத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. இவரது தமிழார்வத்திற்கு இவாது கவிதைகள் தான் சான்று! தமிழ் மொழியின் சுவையை தமிழ் புலவர்கள், பல சமயங்களில், பலவேறு விதமாக குறிப்பிட்டுள்ளார்கள், ஆனல் அவர்களில் ஒருவராவது நமது கவிஞர் குறிப்பிட்டது போல் குறிப்பிட்டார்களில்லையென்று குன்றின்மேலிருந்தும் கூறலாம்! அவ்வளவு உயர்வாக தமிழை சிறப்பித்துக் கூறியிருக்கிறார். தம்மை கவிஞர் போற்றியிருப்பது வெறும் புகழ்ச்சிக்காக அல்ல, ரசித்து அனுபவித்தே தன் கடமையுணர்ந்து குறிப்பிட்டுள்ளார்கள். அவைகளை இனி படித்து ரசிப்போம்!

> " மங்கை ஒருத்தி தரும் சுகமும்—நம்
> மாதமிழ்க்கீடில்லை என்றுரைப்போம்!"

என்கிறார் கவிஞர். மனதிற்கு மங்கைதரும்சுகம்கூட, தமிழ் தரும சுகத்திற்கு ஈடில்லையென்று கவிஞர் கூறுவதிலே மிகை பாடில்லை! பரணி பாடி தரணியாண்ட தமிழ் மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டு, இன்றும் இளமைமாறாது விளங்கும், தமிழ் இலக்கியச் சோலைக்குள்ளே காய்தல், உத்தலின்றி நுழைந்து, அந்த நறுமலர்களை முகர்ந்தவர்களிதன் உண்மையை உணர்வர். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!" வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ் செய்கின்ற தமிழ் எங்கள மூச்சாம்! என்று ஆவேசக் கவிதை தீட்டிய, கவிஞருள்ளம் மங்கையின் சுகத்தையாபெரிதெனமதிக்கும்? உலகிலேயே உயர்ந்தது தமக்கு தமிழ் தானெனக் கருதும் கவிஞர், கால வெள்ளத்தால் தமிழ் மொழிக்கு ஊறு யாரால்வந்தாலும், தமிழ் காக்க அவர் காக்காட்டும் பாதையைப்பாரீர்!

"சிங்கமென்ற இளங்காளைகளே—மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே
பங்கம்விளைத்திடில் தாய்மொழிக்கே—உடல்
பச்சைத்தம்பரி மாரிடுவோம்!"

எனும் கவிஞரின் எக்காளம் கேட்டு, தமிழுணர்ச்சி கொள்ளாதார் யார்? உறுதியும், வீரமும்கலந்த இந்த இலட்சியக்கவிதை, தொண்டுக் கிழவனையும், துள்ளியெழுந்து தமிழ்ப்பணி செய்யச் சொல்லுமென்று, சொல்லவும் வேண்டுமோ? கவிஞரின் நெஞ்சக்கிளை தொத்தும் கிளியாகவே தமிழின் பெருமை, கவிஞரின் கவிதைகளெல்லாவற்றிலுமே மிளிர்கிறது! தமிழியக்கமென்ற புத்தகம் முழுவதுமே, தமிழ் மணம் கமழ்கின்றது. இசையமுதிலொரு பகுதியாகவே இடம் பெற்றுள்ளது.

பாரதிதாசன் இன்றைய தமிழகத்தின் தலைசிறந்தகவி. அவருடைய கவிதைகள் கலா ரசிகர்களுக்கு மட்டு மல்லாமல், விடுதலை இயக்கங்களிலே ஈடுபட்டு பொது நல பணி புரிவோருக்கும், பயன் படும் முறையிலிருக்கிறது! கவிஞர் பாரதிதாசன் அவர்களும், அவர்களது கவிதைகளும் தமிழருக்கு கிடைத்த கருவூலமாகும்! புரட்சிக் கவிஞரின் கவிதையால் புத்துணர்ச்சி பெறும் தமிழர் சமூகமும், புரட்சிக் கவிதைகள் புனைந்து தரும் புரட்சிக்கவிஞரும் நீடூழி வாழ்க!

20A
8-72

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)

S.F. 259A-6—1,00,000—30-1-84.